දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

# රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
# அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
# OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla.**

මගේ අංකය
எனது இல.
My No. } PSC/EST/09-03/03/2017

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2020.07. 15

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 06/2020

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

<u>பொலிஸ் உப சேவைக்காக உத்தியோகத்தரொருவரை அரசாங்க சேவையிலிருந்து விடுவித்தல்</u>

அரசாங்க உத்தியோகத்தரொருவரின் வேண்டுகோளின் பேரில் பொலிஸ் உப சேவையின் பதவியொன்றை வகிப்பதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்படும் காலப்பிரிவொன்றுக்கு (உச்ச காலப்பகுதிக்கு உட்படாத வகையில்) அரசாங்க உத்தியோகத்தரொருவரை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் விடுவிப்பதற்கு நியமன அதிகாரியினால் அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

02. ஆயினும், உத்தியோகத்தரொருவர் குறுகிய காலப்பகுதிக்கு பொலிஸ் உப சேவையின் பதவியொன்றை வகிப்பதற்காக விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 13:3 உட் பிரிவின் கீழ் அமுலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தருக்கு கடமை லீவினை வழங்க முடியும்.

03. பொலிஸ் உப சேவையின் பதவியொன்றை வகிப்பதற்காக விடுவிக்கப்படும் காலப் பிரிவு, அந்த உத்தியோகத்தரின் செயலூக்கமுள்ள சேவைக் காலத்தின் ஒரு பகுதியாக கணிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ஒப்பம்: எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.